# 2,748 கிராம உதவியாளர் காலியிடங்கள் நிரப்ப உத்தரவு

**சென்னை**

வருவாய் நிர்வாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர் மாவட்ட ஆட்சியர்களுக்கு நேற்று எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:

மாநிலத்தில் 2,748 கிராம உதவி யாளர் காலியிடங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த காலியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை எவ்வித விதி மீறலும் நடைபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இதற்காக தாலுகா அளவில் வரும் அக்.10-ம் தேதி விளம்பரம் செய்ய வேண்டும். விண்ணப்பம் அளிக்க இறுதிநாள் நவ.7-ம் தேதி எனவும், விண்ணப்பங்களை பரி சீலிப்பதற்கான இறுதி நாள் நவ.14-ம் தேதியாகவும் நிர்ணயிக்க வேண்டும். விண்ணப்பித்தவர் களுக்கான எழுத்து திறன் தேர்வு நவ.30-ம் தேதியும், நேர்காணல் டிச.15 மற்றும் 16-ம் தேதியும் நடத்தப்பட வேண்டும்.

தேர்வு செய்யப்பட்டவர்கள் பட்டியல் வெளியிடப்பட்டு, அவர் களுக்கான பணி நியமன ஆணைகளை வரும் டிச.19-ம் தேதிக்குள் வழங்க வேண்டும். இதற்காக கடந்த 2020-ம் ஆண்டு அக்.17-ம் தேதி வெளியிடப்பட்ட வருவாய்த் துறை அரசாணை பின்பற்றப்பட வேண்டும்.

எழுத்து தேர்வுக்கான அனைத்து நடைமுறைகளையும் தாசில்தார்களைக் கொண்டு மேற் கொள்ள உரிய அறிவுறுத்தல்களை ஆட்சியர்கள் வழங்க வேண்டும்.